மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் சிப்பந்திகள் இப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அரசுக்கு புகார் எதுவும் இதுவரையில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கண்காணிப்புக் குழு வைத்திருப்பது, புதிய குடிசைகள் வராமல் தடுப்பதற்குத்தான். தவறு நடக்காமல் இருக்க வைக்கப் பட்டிருக்கிறது. மாதத்திற்கு இந்த குழுவுக்கு 7,400 ரூபாய் செலவாகிறது. இதுவரையில் 1,79,000 ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது.

மேட்டுப்பாளையத்தில் வீட்டுவசதித் திட்டம்

*773 வினா—**திரு. மே. சி. தூயமணி**: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தர எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: குடிசைப் பகுதி மாற்று வாரியத் திட்டத்தின்கீழ் கோயம்பத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. மே. சி. தூயமணி: தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் தற்போது குடியிருப்புக்கள் கட்டுவதற்கான திட்டம் இல்லை என்று சொன்னார்கள். அங்கே ஏராளமான ஆதிவாசிகள் தங்குவதற்கு குடிசை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்த ஆதிவாசிகளுக்காவது குடிசைமாற்றுவாரியத் திட்டத்தின்கீழ் குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்த குடிசை மாற்று வாரியப் பணி இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணி முதலில் தலைநகரில் நடைபெறுகிறது. பின்னர் தமிழ்நாடு பூராவும் விஸ்தரிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இந்தத் திட்டத்திற்கு இன்று 35 லட்சம் ரூபாய் வரையில் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தப் பணி கன்னியாகுமரி மாவட்டம் வரையில் ஒவ்

1974 ஏப்ரல் 10]

வொரு மாவட்டமாக வந்துகொண்டிருக்கிறது. மாவட்டந் தோறும் உள்ள பணிகள் எல்லாம் முடிந்தபிறகு நகராட்சிகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம். அதுவரை நகராட்சிகள் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான் ; வேறு வழியில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த குடிசைமாற்று வாரியம் போன்று அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் ஒரு வாரியம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டதே. அது எப்போது ஆரம் பிக்கப்படும் ? அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அதற்கான வாரியத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அதன் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். முதற்கட்டமாக இந்த வாரியம் பொறையாரில் வீடு கட்டும் பணியைத் தொடங்கியிருக்கிறது; வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

House sites for rural landless

* 774 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour, with reference to question No. 93 answered on 11th August 1973, be pleased to state the progress so far made in the acquisition of 548 acres of land in Thanjavur district under the scheme for the provision of house-sites for the rural landless?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து 875.14 ஏக்கர் நிலத்தை மத்திய அரசின் நிலமற்ற கிராமத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தின் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் முடியும் நிலையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இதில் 548 ஏக்கர் நிலம் வாங்கி 4, 5 வருஷங்கள் ஆகியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ; வீடு கட்டப்படவில்லை. அதற்கு என்ன காரணம் ? அதனுல் எவ்வளவு வட்டி நஷ்டம் ஏற்படுகிறது ? ஏற்கெனவே உழுது பயிர் செய்துகொண்டிருந்தவர்களுக்கு வீடு கட்டப்படும் வரையிலாவது அந்த நிலத்தை பயிர் செய்வதற்கு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நிலத்தை வாங்கி, 4, 5 வருஷங்கள் ஆகிவிட்டன என்று சொல்வது நியாயமல்ல. 31—8—1972-ல்தான் தஞ்சை மாவட்டத்தில் நானே ஒரு